# இஸ்லாமியர்களின் பொருளாதார நடவடிக்கையில் முத்துக்குளிப்பும் வர்த்தகமும்: வடஇலங்கையினை அடிப்படையாகக்கொண்ட ஒரு வரலாற்று நோக்கு

[1]கை. கோகிலறமணி ரூ [2]கந்தையா அருந்தவராஜா
[1,2]வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.
*arunn.msu @gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:** ஐரோப்பியர்களது வருகைக்கு முன்னரான காலப்பகுதியில் அதாவது ஆரியச்சக்கரவர்த்திகளது காலப்பகுதியில் வடஇலங்கையினது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் பெருமளவிற்கு யாழ்ப்பாண அரசர்களது மேற்பார்வையில் இஸ்லாமியர்களது கட்டுப்பாட்டின் கீழேயே காணப்பட்டிருந்தது. அதுமட்டுமன்றி அக்காலப்பகுதியில் வடஇலங்கையினது பொருளாதார வளர்ச்சியில் பின்னணியில் நின்றவர்களும் இவர்களே. தொடர்ந்துவந்த ஐரோப்பியர்களது நிர்வாகத்தில் உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் யாவும் அவர்களது கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்டபோதும்கூட இஸ்லாமியர்களின் உதவியுடனேயே தமது நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டிருந்தனரென்பது குறிப்பிடத்தக்கது. வடஇலங்கையில் இஸ்லாமியர்களது பாரம்பரிய தொழில்களிலொன்றாக மிக நீண்டகாலமாக இருந்துவந்த தொழில் முத்துக்குளித்தல் மற்றும் முத்து வர்த்தகம் ஆகிய இரண்டுமே. இஸ்லாமியர்களில் பலர் முத்துக் குளிப்பவர்களாகவும் படகோட்டிகளாகவும் காணப்பட்ட அதேநேரத்தில் முத்து விற்பனையிலும் ஈடுபட்டு அதிகளவு இலாபத்தினைப் பெற்றனர். தொடர்ந்தும் தமது இத்தொழிலை கைவிடாமல் மேற்கொண்டு வடஇலங்கையினது பொருளாதார வளர்ச்சிக்குப் பக்கபலமாக இருந்தமையினை ஆதாரங்களுடன் நியாயப்படுத்த முடியும். வடஇலங்கையின் பொருளாதாரத்திற்கு இஸ்லாமியர்களின் பங்களிப்பினைப் பற்றி அதுவும் முத்துக்குளித்தல், முத்து வர்த்தகம் தொடர்பாக எவரும் தனித்து விரிவாக ஆராயவில்லையென்ற குறைபாட்டினை இவ்வாய்வானது நிறைவு செய்கின்றது. தற்காலத்தில் அருகிவிட்ட இத்தொழில்களின் தன்மைகள், இத்தொழில்களில் ஈடுபட்டவர்கள் எதிர்கொண்ட சவால்கள், அரசிற்கு கிடைத்த பலன்கள், பிரச்சினைகள் போன்றவற்றினை எடுத்துக்காட்டுவதும், வருங்கால ஆய்வாளர்களுக்கு வழிகாட்டியாக இவ்வாய்வு அமைய வேண்டுமென்பதும் ஆய்வினது துணைநோக்கங்களாக உள்ளன. வரலாற்று அணுகுமுறையினடிப்படையில் ஆராயப்பட்டுள்ள இவ்வாய்வில் முதற்தர மற்றும் இரண்டாந்தர ஆதாரங்கள் ஆய்வினது தேவை கருதிப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதற்தர ஆதாரங்களில் ஐரோப்பியரது அறிக்கைகள் குறிப்பாக டச்சுக்காரரது அறிக்கைகள், தொடர்புபட்டவர்களுடனான நேர்காணல்கள், களஆய்வுகள் என்பன குறிப்பிடத்தக்கன. இரண்டாந்தர ஆதாரங்களின் வரிசையில் முதற்தர ஆதாரங்களை அடிப்படையாகக்கொண்டு பிற்பட்ட காலங்களில் எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், பத்திரிகைகளின் செய்திகள் மற்றும் இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள் போன்றன அடங்குகின்றன. மேற்குறித்த ஆதாரங்களின் அடிப்படையில் நோக்குகின்றபோது இஸ்லாமியர்களின் பாரம்பரியத் தொழில்களில்களான முத்துக்குளித்தல் மற்றும் முத்து வர்த்தகம் போன்றன வடஇலங்கையினது நிர்வாகமானது ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்திலும் சரி தொடர்ந்துவந்த ஐரோப்பியர்களது காலத்திலும்சரி சிறப்பாக இயங்குவதற்குப் பக்கபலமாக இருந்ததென்பதனை எவரும் மறுக்க முடியாது.

**திறவுச் சொற்கள்:** முத்துக்குளித்தல், ஆரியச்சக்கரவர்த்திகள், தீர்வை, ஐரோப்பியர்கள், படகோட்டிகள்

## அறிமுகம்

வடஇலங்கையில் இஸ்லாமியர்களின் வரலாறானது நீண்ட பாரம்பரியத்தினைக் கொண்டது. அவ்வாறே இங்கு பரம்பரையாக நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களுக்கும் இவர்களுக்கும் இடையிலான உறவும் உணர்வுமிக்க நீண்ட உறவாகக் இருந்து வருகின்றது. இத்தகைய நீண்ட வரலாற்றினைக்கொண்ட இஸ்லாமியர்களது வடஇலங்கையின் மீதான பொருளாதாரப் பங்களிப்பென்பது தற்காலம்வரை குறிப்பிடத்தக்க வகையில் இருந்து வருகின்றது.பலர் விவசாயிகளாகவும் மீனவர்களாகவும் இருந்துள்ளனர். சிலர் இங்கிருந்து பாதுகாப்புக் காரணங்களுக்காக மலைநாடு சென்று வாசனைப்பொருட்களது வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். சில இஸ்லாமியர்கள் மன்னார், வன்னிப் பிரதேசங்களில் யானைகளைப் பிடிப்பதும் அவற்றினைச் சமகால ஆட்சியாளர்களுக்கு வழங்குவதனையும். விற்பனை செய்வதனையும் பரம்பரையாகச் செய்துவந்தனர். குதிரைகளைக் கொடுத்து யானைகளைப் பரிமாற்றம் செய்கின்ற பண்டமாற்றிலும் சிலர் ஈடுபட்டனர். இவை எல்லாவற்றிலும்விட அவர்களுக்குப் பெயரினைக் கொடுத்தது அக்காலப்பகுதியில் அவர்கள் வடஇலங்கையில் மேற்கொண்டுவந்த முத்துக்குளித்தல் மற்றும் முத்துவர்த்தகம் என்பவைகளே. வடஇலங்கையின் பொருளாதாரத்தில் ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்திலிருந்து பிரதான இடத்தினைப் பெற்றிருந்த இவை இரண்டும் ஏறத்தாள ஆங்கிலேயரது ஆட்சி முடிவிற்கு வரும்வரை தொடர்ந்தது. ஆரியச்சக்கரவர்த்திகளது காலம், போர்த்துக்கேயரது காலம், டச்சுக்காரரது காலம், ஆங்கிலேயரது காலங்களில் ஆட்சியில் இருந்தவர்கள் தமது வருவாயினைப் பெருக்குவதற்கு வடஇலங்கையின் ஒருசில பகுதியில் சிறப்பாக நடைபெற்ற முத்துக்குளித்தல் மற்றும் முத்துவர்த்தகம் என்பனவும் பிரதான காரணங்களாக அமைந்தன.இதற்கு உதவியாக இருந்த இஸ்லாமியர்கள் பலரும்

படகோட்டிகளாக இருந்ததுடன் கடலில் இறங்கியும் முத்துக்களைப் பெற்றனர். அத்துடன் அவற்றினைப் பல இடங்களுக்கும் சென்று விற்பனை செய்வதிலும் ஈடுபட்டனர்.

**வடஇலங்கையில் இஸ்லாமியர்கள்**

வடஇலங்கைப் பிரதேமானது தனக்கென ஒரு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தினைக் கொண்ட பிரதேசமாகக் காணப்படுகின்றமையினை இலக்கியங்களும் அப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தொல்லியல் ஆய்வுகளும் எடுத்தியம்புகின்றன. அதேநேரத்தில் தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட, பல்லினச் சமூகத்தினை உள்ளடக்கியுள்ள வடஇலங்கைப் பிரதேசத்தில் இஸ்லாமிய மக்களுக்கென இச்சமூகத்தில் தனியானதொரு சிறப்பும் அவர்களுக்கென நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியமும் உண்டென்பதனையும் மறுப்பதற்கில்லை. இத்தகைய சிறப்புக்களிலொன்றுதான் அவர்கள் குறித்த பகுதிகளில் வர்த்தகத்திலீட்டிய சாதனைகளாகும்.இலங்கைக்கும் அராபியர்களுக்கும் இடையிலான தொடர்புகள் இஸ்லாத்தின் எழுச்சிக்கு முன்னதாகவே ஏற்பட்டிருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன. இத்தகைய தொடர்புகள் அனைத்தும் வர்த்தகத்தினை அடிப்படையாகக் கொண்டதாகவே காணப்பட்டன. இதற்கு வடஇலங்கையும் விதிவிலக்காக அமையவில்லை.இருப்பினும் இஸ்லாமியர்கள் என்ற வகையில் வடஇலங்கைக்கும் இவர்களுக்கும் இடையிலான தொடர்புகள் கி.பி 8ஆம் நூற்றாண்டின் பின்னதாகவே அதாவது இஸ்லாத்தின் எழுச்சிக்குப் பின்னராகவே ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எதுஎவ்வாறாயினும் வடஇலங்கையில் இஸ்லாமியர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் எங்கு, எப்போது ஏற்பட்டன என்பன தொடர்பாக வரலாற்று ஆசிரியர்களிடையிலே ஒருமித்த கருத்துக்கள் தற்போதுவரை காணப்படவில்லை. அவ்வாறே இம்மக்களது, பண்பாடு, வாழ்க்கை முறைகள், கலை என்பவைகள் தனித்துவம் வாய்ந்ததாகவும் முற்றிலும் ஏனையவர்களது பண்பாடுகளிலிருந்து மாறுபட்டவைகளாகவும் அமைந்திருக்கின்றன. இருப்பினும் வடஇலங்கையினைப் பொறுத்தவரையில் இவர்கள் சில விடயங்கள் பொறுத்து அப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களது பண்பாட்டுக்குள் உள்வாங்கிய நிலையில் காணப்படுவதற்கும் இருவேறுபட்ட கருத்துக்களில்லை.*(அருந்தவராஜா,க.,2012)*

இலங்கைக்குள் இஸ்லாமியர்கள் இந்தியாவிற்குள் நுழைந்தமையினைப் போன்று படையெடுப்பாளர்களாகவோ அல்லது அரசியல் மேலாதிக்க சக்திகளாகவோ வரவில்லை. இந்தியாவிலிருந்த இஸ்லாமியர்கள் இலங்கையுடன் வர்த்தகத்தினை நடாத்தியதன் பின்னராக தீவின் கரையோரங்களில் குறிப்பிடத்தக்களவில் குடியேறியிருந்தனர். தற்காலத்தில் இலங்கையிலுள்ள இனங்களில் இவர்கள் கணிசமானளவு பிரிவினர்களாகக் காணப்படுவதுடன் தமக்கென உள்ள அடையாளங்களையும் தொடர்ச்சியாகப் பேணிவருகின்றனர். வடஇலங்கையில் இஸ்லாமியர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் தொடர்பாக முற்குறிப்பிட்டவாறு வரலாற்று ஆசிரியர்களிடையிலே முரண்பட்ட கருத்துக்கள் காணப்பட்டபோதும் கி.பி 13ஆம் நூற்றாண்டு காலமான ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்துடன்தான் இவர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் அதிகளவிற்கு நல்லூரினை அண்டிய பிரதேசங்களில் காணப்பட்டமைக்கான உறுதியான சான்றுகள் கிடைத்துள்ளன. அதாவதுவடஇலங்கையின் மக்களாக அவர்கள் வாழத் தொடங்கியமைக்கான ஆதாரமானது யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களது காலமான மேற்கூறப்பட்ட காலமே என்பது குறிப்பிடத்தக்கது. இதனை இக்கால இலக்கியங்கள் மற்றும் போர்த்துக்கேயரது ஆவணங்கள் என்பனநிரூபிக்கின்றன.(*Queyroz, Fernao De.,1930)*இவை இஸ்லாமியர்களது குடியேற்றங்கள் இக்காலப்பகுதியில் மிருசுவில், சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், நல்லூர், அலுப்பந்தி, பருத்தித்துறை, ஆனைக்கோட்டை ஆகிய பிரதேசங்களில் காணப்பட்டதாகக் கூறுகின்றன. அதேநேரத்தில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் போன்றவர்கள் கி.பி 8ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையிலும் யாழ்ப்பாணத்திலும் சில இஸ்லாமியக் குடியேற்றங்கள் காணப்பட்டதை கைலாயமாலை மற்றும் வையாபாடல் போன்ற இலக்கியங்களை ஆதராமாகக்கொண்டு குறிப்பிடுகின்றதனையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். *(சிற்றம்பலம், சி.க., 1992),(சபாநாதன்,குல., 1949),(நடராசா.க.செ.,1980)*

இத்தகைய தகவல்கள் எல்லாமே இஸ்லாமிய மக்களது எழுத்தியல்களாக அமையாது தமிழ் மக்களது எழுத்தாதரங்களிலிருந்தே கிடைத்துள்ளன. ஏனெனில் துரதிஸ்டவசமாக பின்வந்தவர்களுக்கு வழிகாட்டியாக இஸ்லாமியர்கள் தமது அக்கால வடஇலங்கையினது வரலாற்றினை அறிந்துகொள்ளுவதற்கு இப்பகுதிகளில் எந்தவிதமான இலக்கிய ஆதாரங்களையோ அல்லது தொல்லியல் மற்றும் கல்வெட்டு ஆதாரங்களையோ விட்டுச்செல்லவில்லையென்பதுகுறிப்பிடத்தக்கது. அதேநேரத்தில் தென்னிலங்கையிலும் நாட்டின் கிழக்குப் பகுதியிலும் ஒருசில இஸ்லாமியக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. *(அப்துல்அஸீஸ்,ஐ.எஸ்.எம்.,1907)* இத்தகைய கல்வெட்டாதாரங்கள் அனைத்தும் இலங்கைக்கும் அராபியருக்குமிடையிலே இருந்துவந்த வர்த்தகத் தொடர்பினையே அதிகம் எடுத்துக்கூறுகின்றனவே தவிர வடஇலங்கைக்கும் அவர்களுக்கும் இடையிலே இருந்துவந்த உறவினது சிறப்புக்களை எடுத்துக்காட்டுவனவாகக் காணப்படவில்லையென்பதும் அவதானிக்கத்தக்கது.

**வர்த்தக நடவடிக்கைகள்**

வடஇலங்கையில் ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்திலும் பின்வந்த ஐரோப்பியர்களது ஆட்சிக்காலத்திலும் அச்சமயங்களில் ஆட்சியிலிருந்த ஆட்சியாளர்கள்மேற்கொண்டிருந்த வர்த்தகத்தினை உள்நாட்டு வர்த்தகம், வெளிநாட்டு வர்த்தகமென இருவகைப்படுத்தலாம். அதிலும் அது கொண்டிருந்த வெளிநாட்டு வர்த்தகத்தினை இரண்டு பிரிவுகளாக வகுத்து நோக்கமுடியும். ஒன்று அது நாட்டுக்குள்ளேயே பிற இராச்சியங்களுடன் செய்துகொண்ட வர்த்தக நடவடிக்கைகள் மற்றையது தேசத்திற்கு வெளியே பிற நாடுகளுடன் செய்துவந்த வர்த்தக நடவடிக்கைகள். ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, கொழும்புத்துறை, மாதோட்டம், அரிப்பு, கச்சாய், முல்லைத்தீவு போன்ற துறைமுகங்கள் இவர்களது வர்த்தகச் செயற்பாடுகளுக்குப் பெருமளவிற்கு உதவி செய்தன. அவ்வகையில் இவற்றினுடாகவே இலங்கையின் கிழக்குப் பகுதிகள், தென்னிலங்கை மற்றும் தென்னிந்தியப் பகுதிகளுடன் வடஇலங்கையினைக் காலத்திற்குக் காலம் நிர்வகித்த உள்நாட்டு மற்றும் அந்நிய ஆட்சியாளர்கள் யாவரும் வர்த்தக உறவினைப் பேணியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இத்தகைய துறைமுகங்கள் தனியே வடஇலங்கை ஆட்சியாளர்களது தேவைகளுக்கு மட்டுமன்றிக் கண்டி இராச்சியமானது இவற்றினைப் பயன்படுத்தி தென்னிந்தியாவுடனும் தொடர்புகளைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது*(நித்தியானந்தம்,வி.,2033)* மேலும் யாழ்ப்பாண இராசதானியினை அண்மித்தவகையில் கொழும்புத்துறையில் உள்ள துறைமுகம் காணப்பட்டதனால் அதனூடாக அக்காலப்பகுதியில் வன்னிப் பிரதேசங்களுடனும் தொடர்புகளை இலகுவாக ஏற்படுத்தக்கூடியதாகவும் இருந்தது. இஸ்லாமியர்களைப் பொறுத்தவரை இவர்கள் முழுக்க முழுக்க வர்த்தகத்தினையே பிரதான இலக்காகக் கொண்டிருந்தமையின் பின்னணியில் அவர்களது நடமாட்டங்களும் குடியிருப்புக்களும் வடஇலங்கையில் முக்கியமான வர்த்தக நிலையங்களை அண்மித்த வகையில் காணப்பட்டிருந்தது.

பொதுவாகவே இஸ்லாமியர்களுக்கும் வர்த்தகத்திற்கும் இடையிலே நெருக்கமான உறவு காணப்படுகின்றது. "திரைகடலோடியும் திரவியம் தேடு'' என்ற முதுமொழியானது தமிழர் மத்தியில் பண்டுதொட்டுக் காணப்பட்டு வந்தாலும் உண்மையில் இத்தகைய முதுமொழியானது இஸ்லாமியருக்கும் உகந்ததென்பதே எனது கருத்து. காரணம் அவர்கள் வர்த்தக அடிப்படையில் செல்லாத தேசம் இல்லை. விற்பனை செய்யாத பொருட்கள் இல்லை. அவ்வகையில் ஆங்கிலேயர்களது காலம் வரை வடஇலங்கையிலும் சரி அல்லது இலங்கை முழுவதிலும் என்றாலும் சரி வர்த்தகத்தில் செல்வாக்குப் பெற்ற பிரிவினர்களாகவே இவர்கள் இருந்து வந்துள்ளனர். குறிப்பாகச் சொல்லப்போனால் வடஇலங்கையினது பொருளாதார நடவடிக்கையில் இவர்களது பங்களிப்பினை அக்காலப்பகுதியில் குறைத்து மதிப்பிட முடியாது. ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்தில் அவர்களது மேற்பார்வையில் உள்நாட்டு வர்த்தகமும், வெளிநாட்டு வர்த்தகமும் இவர்களாலேயே பெருமளவிற்கு மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் ஆரியச்சக்கரவர்த்திகளது அந்தரங்கச் செயலாளர்களாகவும், படை வீரர்களாகவும், வைத்தியர்களாகவும்கூட இருந்துள்ளனர். *(சிற்றம்பலம்,சி.க.,1992)*அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இவர்களது வர்த்தக நடவடிக்கைகள் யானை வர்த்தகம், முத்து வர்த்தகம், வாசனைப் பொருட்களின் வியாபாரம் போன்றவற்றினை உள்ளடக்கிய வகையில் காணப்பட்டமை அவதானிக்கத்தக்கது.

பொதுவாக இஸ்லாமியர்கள் என்றாலே வர்த்தகர்கள், வியாபாரிகள் என்ற சிந்தனைகளே எல்லோர் மத்தியிலும் ஏற்படும். அவ்வகையில் அக்காலப்பகுதியில் இவர்கள் வடஇலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பல வகையான தொழில்களை மேற்கொண்டு வந்ததுடன் அத்தகைய தொழில்களில் சிறப்புத் தேர்ச்சியினையும் பெற்றிருந்தனர். சிலர் விவசாயிகளாகவும், மீனவத்தொழிலை மேற்கொண்டும் வந்தனர். ஐரோப்பியர்களிடமிருந்து பாதுகாப்பினை பெறுகின்ற நோக்கத்துடன் கண்டிக்குச் சென்ற இவர்கள் வாசனைத் திரவிய வியாபாரத்திலும் ஈடுபட்டனர். இஸ்லாமியர்களில் சிலர் பொதி சுமக்கின்ற மாடுகளுடன் கண்டியிலிருந்து புறப்பட்டுநீண்ட தூரத்திற்குத் தமது பயணத்தினை மேற்கொண்டு வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.(*பத்மநாதன், சி.,2001)*

**முத்துக்குளித்தல், வர்த்தகம்**

முத்துக்குளித்தல், முத்து வர்த்தகம் என்பன சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பாகவே ஆரம்பித்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன. புராதன காலங்களில் தோற்றம் பெற்றிருந்த நாகரிகங்கள் அனைத்திலுமே இவை பெண்களதும் ஆண்களதும் பிரதான அணிகலன்களாக இருந்துள்ளன. சுமேரியர்கள் பாரசீக வளைகுடாப் பகுதியில் சுமார் 4000 வருடங்களுக்கு முன்னதாக முத்தெடுத்தனர். ஜப்பானில் 2000 வருடங்களுக்கு முன்னதாக "அமா'' எனப்பட்ட பெண்கள் முத்தெடுத்த வரலாறு உண்டு. இவ்வாறு உலகில் முத்தெடுத்த வரலாற்றினை நீட்டிக்கொண்டே போகலாம். 1930களில் பாரசீக வளைகுடாப் பகுதியில் முத்தெடுத்தல் மற்றும் முத்து வர்த்தகம் என்பன பாரிய தொழில்களாக விருத்தி கண்டன.(https://en.wikipedia.org/wiki/Pearl_hunting) எனவே இவ்ஆரம்பகால முத்தெடுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பகுதிகளும் அவற்றினை மேற்கொண்டவர்களும் அராபிய மற்றும் பாரசீகர்களாகவே இருந்துள்ளனர். இவர்களே பிற்பட்ட காலங்களில் இஸ்லாமியர்களாக

உருவாகினரென்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய நாகரிகங்களில் வாழ்ந்தவர்களுக்கும்கூட இத்தகைய முத்துக்களைக் கொண்டு சென்றவர்களும் இவர்களே.

இலங்கையின் வரலாற்றினைக் கூறுகின்ற மகாவம்சத்தில் முத்துப் பற்றியும் இரத்தினக் கற்கள் தொடர்பாகவும் குறிப்புக்கள் உள்ளன. விஜயனுடைய அமைச்சர்கள் மதுராபுரிக்கு இலங்கையிலிருந்து இவற்றினைக்கொண்டு சென்றதாகக் குறிப்பு வருகின்றது. கி.மு.3ஆம் நூற்றாண்டளவில் தேவநம்பியதீசனால் இவை அக்காலத்தில் மௌரியப் பேரரசனாக இருந்த அசோகனுக்கு அனுப்பப்பட்டதாகவும் செய்திகள் மகாவம்சத்தில் உள்ளன. (மகாவம்சம்.அத்.11) துட்டகாமினியினது கதையிலும் சில இடங்களில் முத்துக்கள் தொடர்பான விடயத்தினைக் காணலாம். (மகாவம்சம்.அத்.27) அவ்வகையில் இலங்கை வரலாற்றினைக் கூறுகின்ற இவ்விலக்கியத்தில் முத்துக்கள் தொடர்பான விபரங்கள் சுட்டப்படுவதனால் ஒன்றில் இங்கே முத்துக்குளித்தல், முத்து வர்த்தகம் என்பன அக்காலப்பகுதியில் நடைபெற்றிருக்க வேண்டும் அல்லது அராபியர்களினாலோ அல்லது பாரசீகர்களினாலோ இங்கே இவை கொண்டு வந்திருக்கப்பட்டிருத்தல் வேண்டும். காரணம் இக்காலப்பகுதியில் இலங்கையுடன் இவர்கள் கொண்டிருந்த வர்த்தக உறவிற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. அப்படியானால் மகாவம்சத்தினது தோற்ற காலத்திற்கு முன்னதாகவே இலங்கையில் முத்துக்களின் பயன்பாடு இருந்துள்ளதென்ற முடிவிற்கு நாம் வரலாம். கௌடில்யருடைய அர்த்தசாஸ்திரத்தில் இலங்கையின் முத்துக்கள் மகததேசத்திற்குக் கொண்டு செல்லப்பட்டமைக்கான செய்தி உள்ளது. *(இத்ரீஸ்,ஏ.பி.எம்,2011)* அல்லிராணி அரசியினது நிர்வாகமானது மன்னார் முத்துக்குளிப்பின் முக்கியத்துவத்தினால் உருவானதென்ற வாய்வழிச் செய்தியொன்று உள்ளது.

வடஇலங்கையினைப் பொறுத்தவரை இஸ்லாமிய மக்களது பொருளாதார நடவடிக்கையில் முத்துக்குளித்தல் மற்றும் முத்து வர்த்தகம் என்பன ஆரம்ப காலங்களிலிருந்தே பிரதான இடத்தினைப் பெற்றிருந்தாலும் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்திலிருந்துதான் இவை பிரபல்யம் அடைவதனைச் சான்றுகள் தெரிவிக்கின்றன. அதுமட்டுமன்றி இஸ்லாமிய மக்களது மற்றொரு பாரம்பரியத் தொழிலாகவும் இதனைக் கருதலாம். இவர்கள் முத்துக்குளிப்பவர்களாகவும் படகோட்டிகளாகவும் விளங்கிய அதேநேரத்தில் முத்து விற்பனையாளராகவும் திகழ்ந்திருந்தனர். அத்துடன் எடுக்கப்படுகின்ற முத்துக்களைத் தரம் பிரிப்பதில் வல்லவர்களாகவும் சமகாலத்தில் காணப்பட்டனர். குறிப்பாக முத்தினை இவர்கள் ஏறத்தாள 10 வகையாகத் தரம் பிரித்தனர். ஆணி,கனதாரி,மக்கை, மடக்க, குறவில், பீசல்,குறள்,தூள், ஒட்டுமுத்து என்பவைகளே அவை.*(இத்ரீஸ்,ஏ.பி.எம்,2011)*

அக்காலப்பகுதியில் முத்துக் குளிப்பிற்கு வடஇலங்கையின் மன்னார் பிரேதசமானது பெயர் பெற்ற பிரதேசமாகக் காணப்பட்டது. இருப்பினும் இந்தியாவின் எல்லைப்பகுதிக்குள் அடங்கியுள்ள தூத்துக்குடியினை அடுத்துள்ள கரையோரங்களிலும் இலங்கையில் சிலாபம் தொடக்கம் மன்னார் வரையான கரையோரங்களிலும் முத்துக்குளிப்பானது அதிகளவிற்கு நடைபெற்றது. முத்துக்கொளிக்கின்ற சிப்பிகள் குதிரைமலைக்கும் மன்னாருக்கும் இடையிலே காணப்படுகின்ற அரிப்பு என்ற இடத்தின் கரையோரப் பகுதிகளில்தான் பெருமளவில் விளைந்தன.*(ஸ்ருவர்ட்,ஜி.,1958)*இவை உள்நாட்டவர்களால் மட்டுமன்றிப் பிற நாடுகளினால் அழகுசாதனப் பொருள் என்ற அடிப்படையில் விரும்பிக் கொள்வனவு செய்யப்பட்டன. பண்டைக்காலம் முதலாகவே உலகளாவிய வர்த்தகத்தில் முத்துக்கள்பிரதான இடத்தினைப் பெற்றிருந்தன.சிந்துவெளி நாகரிக மக்கள் மன்னாரிலிருந்து முத்துக்களை எடுத்துச் சென்றமைக்கான ஆதாரங்களும் உள்ளன.

14ஆம் நூற்றாண்டளவில் இத்தகைய முத்துக்குளிப்பின் மூலமாக யாழ்ப்பாண அரசர்கள் அதிகளவான வருவாயினைப் பெற்றுக் கொண்டனர். இது அவர்களது ஏகபோக உரிமையாகவும் காணப்பட்டது. மன்னார் பகுதிகள் மட்டுமன்றி வடஇலங்கையில் காணப்பட்ட தீவுப்பகுதிகளிலும் அக்காலப்பகுதியில் ஏராளமான முத்துக்கள் விளைந்தன. குறிப்பாக நயினாதீவுப் பிரதேசத்தில் இஸ்லாமியர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் பல இப்பகுதியில் நடைபெற்ற சங்கு மற்றும் முத்துக்குளிப்புடன் இணக்கப்பட்டே பேசப்படுகின்றது. அதாவது முத்துக்குளிக்கின்ற நோக்கத்துடன் வந்த இஸ்லாமியர்களில் பலர் அக்காலப்பகுதியில் அங்கு வாழ்ந்த தமிழ்பெண்களைத் திருமணம் செய்ததன் மூலமாக இப்பகுதிகளில் குடியேறி நிரந்தரமாக வாழ்ந்ததாகச் செவி வழியான கதையொன்று அத்தீவினது இஸ்லாமியர்களது வரலாற்றில் காணப்படுகின்றது. அவர்களது வழிவந்த கேரளத்து இஸ்லாமியர்களே தற்போதும் நயினாதீவில் வாழ்ந்து வருகின்றனர்.*(அருந்தவராஜா,க.,2012)*

முத்துச்சிப்பிகள் உருவாவது தொடர்பான பல ஐதீகங்கள் இவ் வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்த இஸ்லாமியரிடையே இருந்து வந்தன. மீன் இனத்தினது முட்டைகள் போன்றே முத்துச்சிப்பிக் குஞ்சுகளும் ஆரம்ப பருவத்தில் மிதப்பன. இதன்போது இவை ஒன்றுடனொன்று ஒட்டியும் கொள்ளுகின்றன. இவற்றினைவிட கடலில் மிதப்பன எவையாயினும் அவை அவற்றில் ஒட்டிக்கொள்ளுகின்ற இயல்பினைக் கொண்டுள்ளன. பலமான காற்றுக்களின்போது மிதக்கின்ற இவை கரைக்கும் வருவதுண்டு. சிலவேளைகளில் இத்தகைய காற்றோ அல்லது நீரோட்டங்களோ இவற்றினை ஆழ்கடல் பகுதிகளுக்கு இழுத்துச் செல்லப்படுகின்றன. இச்சிப்பிகள்

வளர்ச்சியடைவதற்கு ஊரிப்பாறைகள் சிதறியுள்ள மணற்பாங்கான இடங்கள் பொருத்தமானவை என்பது குறிப்பிடத்தக்கது.*(ஸ்ருவர்ட்,ஜீ.,1958)*பெறுமதியான முத்துச்சிப்பிகள் பெரும்பாலும் ஆறு பாகம் தொடக்கம் எட்டு பாகம்வரையான ஆழமான பகுதிகளிலேதான் உள்ளன. கரையிலிருந்து சுமார் பதினெட்டு மைல்களுக்கு அப்பால் உள்ள கடற் பிரதேசங்களில் எட்டுத் தொடக்கம் பதின்மூன்று பாகம் வரையான ஆழமான பகுதிகளில் இத்தகைய முத்துச்சிப்பிகள் காணப்பட்டன. குறைந்தது ஏழு வருடங்களாவது சென்றால்தான் விலையுயர்ந்த முத்துக்களைப் பெறலாம். ஏழாவது வருடத்தின்போது முத்துக்களின் பெறுமதியானது இரட்டிப்பாகக்கூடிய அளவிற்கு முத்துக்கள் விளைகின்றன. முத்துச்சிப்பியொன்றில் 150 வரையான முத்துக்கள் இருப்பதாக நம்பப்பட்டது. இருப்பினும் எடுக்கப்படுகின்ற அதிகமான சிப்பிகளில் முத்துக்கள் கிடைப்பதில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்தில் முத்தெடுக்கச் செல்லும்போது குறைந்தது ஐந்து பேராவது செல்லுவர். அவர்களில் ஒருவர் படகினைச் செலுத்துபவராகவும் இருவர் கடலுக்குள் செல்வதற்கும் ஒருவர் கடலுக்குள் இறங்கியவுடன் கயிற்றினைப் பிடிப்பதற்கும் மற்றவர் கிடைக்கின்ற முத்துக்களைச் சேகரிப்பதற்குமெனக் காணப்படுவர். ஆனால் பிற்பட்ட காலங்களில் படகொன்றில் 20பேர் வரை முத்தெடுக்கின்ற பாரிய தொழிலாக இத்தொழில் மாறியதனையும் காணலாம்.இதன்போது முத்துக்குளிப்பில் உபயோகப்படுத்தப்படுகின்ற படகானது குறைந்தது 6 தொன் தொடக்கம் 10 தொன் வரையானதாகக் காணப்பட்டது. வடகீழ் பருவக்காற்றுக் குறைவடைகின்ற மார்ச்சு-ஏப்ரல் மாதங்களிலேதான் முத்தெடுத்தல் அதிகமாக நடைபெறுவது வழக்கம். சுழியோடிகள் கடலில் இருக்கின்ற சந்தர்ப்பங்களில் அவர்களை எவையும் தீண்டாமல் இருப்பதற்கு மந்திரவாதி ஒருவர் கரையிலிருந்து பிராத்தனை செய்வார். ஆட்சியாளர்கள் அவருக்கு வேண்டியதனைக் கொடுப்பர். சுழியோடிகளும் சற்று நேரம் இறைவனைத் துதித்த பின்னரேயே கடலில் குதித்தனர்.

14ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கைக்கு வந்த ஜோர்தனஸ் என்பவர் சுமார் 8000 படகுகள் வரை முத்துக்குளிப்பில் ஈடுபட்டதாகக் கூறுகின்றார். இபன்பட்டுட்டா என்ற யாத்தீரிகன் கடலில் கிடைத்த முத்துச்சிப்பிகளை சிலர் வெயிலில் காயப்போட்டதனைக் கண்டதாகக் கூறுகின்றார். சிலர் அவற்றினது தரத்திற்கேற்றவாறு வகைப்படுத்தியிருந்தனர். இபன்பட்டுட்டாவிடம் ஆரியச்சக்கரவர்த்தி சில முத்துக்களைக் காண்பித்து அவை பற்றியும் விசாரித்ததாக அவரது குறிப்புக்கள் கூறுகின்றன. எகிப்திய இஸ்லாமியரான இவரிடம் ஆரியச்சக்கரவர்த்தி முத்துக்களைக் காட்டி அவற்றினது விபரத்தினை கேட்டு அறிந்த செய்தியானது முத்து வர்த்தகத்தில் இஸ்லாமியர்கள் பெயர் போனவர்கள் என்பதனை ஆரியச்சக்கரவர்த்தியே ஏற்றுக்கொண்டதாக உள்ளது. மற்றையது அவரது அரண்மனையில் உள்ளவர்கள் பலரும் இவர்களைப் போன்று மேற்கூறப்பட்டவிடயமாகச் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கவில்லையென்பதனையும் இச்சம்பவமானது உணர்த்துகின்றது.

முத்துக்குளித்தல் நடைபெறுகின்ற காலங்களில் பாதுகாப்பிற்குப் படைகளும் அரச அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர். அதன் பொருட்டுச் சிறிய குடிசைகளும் ஏற்கனவே இவற்றுக்காக அமைக்கப்பட்டிருந்த கட்டடங்களும் பயன்படுத்தப்பட்டன. இப்பகுதியில் கூடுகின்றவர்களுக்கு நீர் வசதியினைச் செய்வதற்காக இப்பகுதியில் காணப்பட்ட குளங்கள் சுத்தமாக்கப்பட்டன. உணவு வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.*(பத்மநாதன்,சி.,2011)*முத்துக்குளிப்பினைப் பார்ப்பதற்கு கூட்டம் கூட்டமாக மக்கள்இப்பகுதிகளுக்கு வருவதும் வழமையாக இருந்தது. மன்னார் கடலில் நடைபெற்ற முத்துக்குளிப்பினால் ஆரியச்சக்கரவர்த்திகள் அதிகளவான வருவாயினைப் பெற்றனர். இவற்றிலிருந்து கிடைத்த வருவாய்களின் மூலமாக அவர்களினால் சிறப்பான நிர்வாகத்தினையும் பலமானதொரு படையினையும் தமது பகுதிகளில் உருவாக்க முடிந்தது.13ஆம் 14ஆம் நூற்றாண்டுகளில் இவை அதிகளவில் விளைந்தன. அக்காலப்பகுதியில் மன்னாரிலிருந்து பெறப்பட்ட முத்துக்களை வணிகர்கள் பலரும் வாங்கிச் சென்றனர். அவர்களில் இஸ்லாமிய வணிகர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவை அழகுசாதனப் பொருட்களாகக்காணப்பட்டதன் பின்னணியில் அரசரும் இஸ்லாமிய வணிகரும் அதிகளவான ஆதாயத்தினை இவற்றின் மூலமாகப் பெற்றனர். *(பத்மநாதன்,சி.,2002)* முத்துச்சிலாபத்தினைக் குறித்துப் புவனேகபாகு என்ற அரசனுடன் சிங்கையாரியன் முரண்பட்டான் என யாழ்ப்பாணவைபவமாலை என்ற நூல் கூறுவதிலிருந்து யாழ்ப்பாண அரசன் அதனது முக்கியத்துவத்தினை உணர்ந்து அதனைத் தன்வசப்படுத்த எடுத்த முயற்சி பற்றி அறிய முடிகின்றது.

13ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்த காயல்பட்டணம் சிறந்த துறைமுகமாகக் காணப்பட்டது.யாழ்ப்பாண அரசு நிலைத்திருந்த காலத்திலும் பின்னர் வடஇலங்கையில் செல்வாக்கினைச் செலுத்திய போர்த்துக்கேயர் மற்றும் டச்சுக்காரரது காலப்பகுதிகளிலும் வடஇலங்கையும் தென்னிந்தியாவும் வர்த்தக அடிப்படையில் நெருக்கமான உறவினைக் கொண்டிருந்தன. மன்னார்க் கடலிலிருந்து பெறப்பட்ட முத்துக்களில் அதிகமானவை இஸ்லாமியர்களால் அங்குதான் விற்பனை செய்யப்பட்டன. பின்னர் அங்கிருந்து முத்துக்கள் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பப்பட்டன. இவ்வாறு முத்துக்களைத் தென்னிந்தியத் துறைமுகங்களில் விற்பனை செய்த இவர்கள் அங்கிருந்து அரிசி மற்றும் புடவைகளை இறக்குதி செய்து வடஇலங்கை மக்களுக்கு வழங்கியதன் ஊடாகத் தமது வருவாயினை அதிகரித்தனர்.

இவர்கள் மூலமாகவே வடஇலங்கைக்குப் பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு போன்ற உலோகப்பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

14ஆம் நூற்றாண்டில் மாலையாளக்கரையில் யூர் பட்டணம் என்ற துறைமுகமானது அக்காலப்பகுதியில் முதன்மையான துறைமுகமாகக் காணப்பட்டது. (*கிருஸ்ணராசா,செ.,2002)* மன்னாரிலிருந்தும் பிற இடங்கள் பலவற்றிலிருந்தும் வணிகர்கள் முத்துக்களைச் சேகரித்துக்கொண்டு அத்துறைமுகத்திலே விற்பனை செய்தனர். முத்துக்குளித்தல் நடைபெறுகின்ற காலங்களைத் தவிர ஏனையகாலங்களில் சங்கு குளித்தல் இப்பகுதிகளில் நடைபெற்று வந்தது. இதனால் சங்குகளும் இஸ்லாமியர்களின் மூலமாக யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றுமதியாயின எனலாம். வங்களாத்திலே இவை அதிகளவில் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாகச் சமய விழாக்களின்போது இவற்றினது தேவையானது அதிகளவில் காணப்பட்டது. *(கிருஸ்ணராசா,செ.,2002)*இஸ்லாமிய வணிகர்களுடன் ஐரோப்பியர்களது காலத்தில் இவ்வர்த்தகத்தில் செட்டிகள், பட்டினவர், முதலியோரும் பின்னாளில் இணைந்தனர். இவ்வாறு முத்துக்குளித்தல் மற்றும் முத்து வர்த்தகத்திலீடுபட்ட இஸ்லாமியர்கள் வடஇலங்கையில் அக்காலப்பகுதியில் செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்த ஆட்சியாளர்களுக்குப் பெருமளவிலான தீர்வையினைச் செலுத்த வேண்டியிருந்தது. ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்தினை விடவும் ஐரோப்பியர்களது காலத்திலேதான் இவர்களது முத்துக்குளித்தல் நடவடிக்கைகளுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதுடன் தீர்வையும் மோசமாக அறவிடப்பட்டதனால் இஸ்லாமியர்களது நடவடிக்கைகள் யாவும் இவர்களது காலப்பகுதியில் தடைப்பட்டன.

யாழ்ப்பாணவைபவமாலையில் ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்தில் வடஇலங்கையின் சில பகுதிகளில் வாழ்ந்த இஸ்லாமியர்கள்பற்றிய குறிப்புக்கள் உள்ளன. அதில் இவர்களில் அனேகர் காயல்பட்டணத்திலிருந்து வந்து நல்லூர் உள்ளிட்ட சில பகுதிகளில் குடியேறியிருந்ததாகச் சொல்லப்படுகின்றது. இந்நூல் அவர்களைச் சோனகர் என்றே விழிக்கின்றது. அதில் அவர்களை இப்பகுதியிலிருந்து விரட்டுவதற்கு பல முயற்சிகளை யாழ்ப்பாணத்தவர்கள் மேற்கொண்டதாகவும் குறிப்புக்கள் உள்ளன. *(சபாநாதன்,குல.,1949)* விரட்டப்பட்ட இவர்கள் வடஇலங்கையினை விட்டுச் செல்லாமல் வடஇலங்கையின் பிற பகுதிகளில் சென்று குடியேறினர். இத்தகைய கூற்றிலிருந்து அவர்கள் நிலையான வாழ்விடமாக இக்காலப்பகுதியில் வடஇலங்கையினைக் கொண்டிருந்தமை தெளிவாகின்றது. இன்னுமொன்று நிலையான வாழ்விடத்தினை அமைத்தமையின் பின்னணியிலேதான் தமது வர்த்தக நடவடிக்கைகளை அப்பகுதிகளில் விஸ்தரித்திருக்க முடியும் என்ற எடுகோளின் அடிப்படையில் ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்திற்குப் பின்னதாகவே இவர்களது முத்துக் குளித்தல் மற்றும் முத்து வர்த்தக நடவடிக்கைகள் இடைஞ்சல்கள் எதுவுமின்றி விஸ்தரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஏற்கனவே குறிப்பிட்டதன் பிரகாரம் ஐரோப்பியர்கள் இவர்களது நடவடிக்கைகளுக்குத் தடையாக இருந்ததும் கவனிக்கத்தக்கது.

பண்ணைத்துறையில் போர்த்துக்கேயர் வடஇலங்கையினை ஆக்கிரமித்த சமயத்தில் இஸ்லாமியரர்களால் ஏற்கனவே அப்பகுதியில் பள்ளிவாசல் ஒன்றினை அமைத்திருந்ததாக தகவலொன்று உள்ளது.*(Perera,S.G.,1943)*அத்துடன் இப்பகுதியில் முருகைக் கற்களினாலும் களிமண்ணினாலும் கட்டப்பட்டு பீலி ஓடுகளினால் வேயப்பட்ட இரண்டு இஸ்லாமியர்களுடைய பண்டகசாலைகள் இருந்திருக்கின்றன. இவற்றினை அமைப்பதற்கான அனுமதியினையும் இவர்கள் யாழ்ப்பாண அரசரிடம் பெற்றும் இருந்தனர். அதாவது பகலில் நகரத்தில் வியாபாரத்தினைச் செய்துவிட்டு இரவு வேளைகளில் பண்டகசாலைக்குள் முடங்கிவிட வேண்டுமென்பதே யாழ்ப்பாண அரசர்கள் அவர்களுக்கு விதித்திருந்த கட்டளை ஆகும்.எனவே அக்காலத்தில் உள்நாட்டுப் போக்குவரத்தில் முக்கியமான துறைமுகங்களிலொன்றாக விளங்கியஇத்துறைமுகத்திற்கு அண்மையில் இவர்கள் பள்ளிவாசலையும் பண்டகசாலைகளையும் அமைத்திருந்தமையானது தமது வியாபார நோக்கங் கருதியே என்பதில் இருவேறுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லை. அவ்வகையில் இவர்கள் நகரத்தில் வியாபாரம் செய்த பொருட்களில் முத்தும் இருந்திருக்க வாய்ப்புள்ளது. காரணம் இக்காலப்பகுதியில் இப்பிரதேசங்களில் வாழ்ந்த பெண்கள் நாகரிகமானவர்களாக பெறுமதிமிக்க முத்துக்களை அணிந்தமை பற்றியும் இக்கால இலக்கியங்களில் குறிப்புக்கள் உள்ளன. இப்பண்ணைத்துறையிலேதான் போர்த்துக்கேயர் அமைத்துள்ள கோட்டையானது தற்போதும் கம்பீரமாக உள்ளது.

வடஇலங்கையானது போர்த்துக்கேயரது செல்வாக்கிற்கு உட்பட்ட காலகட்டத்தில் மதுரை நாயக்கர்கள் தென்னிந்தியா மற்றும் இலங்கைப் பகுதிகளில் முத்து வியாபாரத்தில் தனியுரிமை பெற்று விளங்கியமை குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் இவர்களுக்கு உதவியாக இஸ்லாமிய மக்களும் தரகு வேலைகளுடன் தொடர்புபட்டிருந்தனர். முத்துக்குளிப்பவர்களும் முத்து வர்த்தகர்களும் தமக்குத் தீர்மானிக்கப்பட்ட விலைகளின்படி முத்துக்களை விற்பனை செய்வதற்கான நடைமுறையினை மேற்கொண்டிருந்தனர். *(Silva,K.M.,De.,1981)* ஆனால் வடஇலங்கையானது போர்த்துக்கேயரிடம் சென்றதன் பின்னராக முத்து வர்த்தகமும் போர்த்துக்கேயரது கைகளுக்கு மாறியது. அத்துடன் இஸ்லாமியர்களதுமுத்து வர்த்தகத்தினைத் தடுக்கின்ற நோக்கத்துடன் போர்த்துக்கேயப் படைவீரர்களும் கரையோரப் பகுதிகளைக் காவல் புரிந்தனர். தொடர்ந்து இவர்களது காலத்தில் முத்துக்குளித்தல் மற்றும் முத்து வர்த்தகத்திலீடுபட்ட அனைவரதும் பெயர்கள் பதிவு செய்யப்பட்டன. அவ்வகையில் போர்த்துக்கேயரதுவருகைக்குப் பின்னராகவே

முத்துக்குளிப்புத் தொடர்பான விபங்கள் தெளிவாகப் பதியப்பட்டன எனலாம். முத்து வர்த்தகச் செயற்பாடுகளுக்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் அனைத்தும் அகற்றப்பட்டு மீளவும் அதற்கான பருவகாலம் வருகின்றபோது அமைக்கப்பட்டன. அவ்வகையில் முத்துக்குளிப்புடன் தொடர்புபட்ட வகையில் பலரும் வேலைவாய்ப்பினைப் பெற்றனர்.

போர்த்துக்கேயர்கள் தங்களுக்குரிய வருவாயினை முத்துக்குளிப்பவர்களிடமிருந்து வரியாகப் பெற்றனர். கத்தோலிக்கர்கள் குறிக்கப்பட்ட தொகையினை வரியாகச் செலுத்தியே முத்துக்குளிப்பில் ஈடுபட்டபோது இஸ்லாமியர்கள் இரண்டு மடங்கு வரியினைச் செலுத்த வேண்டியிருந்தது.(*Silva,K.M.De.,1981)*1580இல் முத்துக்குளிப்பிலிருந்து பெறப்பட்ட மொத்த வருவாயானது 6400 பார்டோஸ்களாக அதிகரித்தது. 16ஆம் நூற்றாண்டில் முத்துவியாபாரிகளிடமிருந்து சராசரி வருடவருமானமாக 10,000 பார்டோஸ்களைப் போர்த்துக்கேயர் பெற்றனர். (குணசிங்கம்,மு.,2008) அதேநேரத்தில் போர்த்துக்கேயரது நிர்வாகத்தில் இஸ்லாமியர்களினால் சுதந்திரமான முறையில் முத்து வர்த்தகத்தினை மேற்கொள்ள முடியவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. போர்த்துக்கேய ஆவணங்களில் சுதேசிகள், பரதேசிகள் எனப்பட்ட இருவகையான இஸ்லாமியர்களைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஆரம்பகாலங்களில் வந்து குடியேறியவர்கள் சுதேசிகள் எனவும் தென்னிந்தியாவுடன் தொடர்புகளைக் கொண்டவர்கள் பரதேசிகளாகவும் போர்த்துக்கேயரது பார்வையில் காணப்பட்டனர். *(அருந்தவராஜா,க.,2012)*போர்த்துக்கேயர் இலங்கைவந்த காலப்பகுதியில் இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலே நடைபெற்ற வர்த்தகமானது முழுவதும் இஸ்லாமியர்களிடமே காணப்பட்டமை அவதானிக்கத்தக்கது.

போர்த்துக்கேயரைத் தொடர்ந்துவந்த டச்சுக்காரரது காலத்திலும் அவர்கள் இஸ்லாமியர்களுடைய ஆதரவுடன் முத்துக்குளித்தலையும் முத்து வர்த்தகத்தினையும் திறம்படக் கவனித்து வந்தனர். வருடாந்தம் சராசரியாக 50-60 இறத்தல் முத்துக்கள் ஒல்லாந்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதாக வி.சிவசாமி குறிப்பிடுகின்றார்.*(சிவசாமி,வி.,2013)* 1665இல் வாண்டர்லான் என்பவர் 400 படகுகளுடன் முதலாவது முத்துக்குளிப்பினை மேற்கொண்டிருந்தார். அரிப்பில் மேற்கொள்ளப்பட்ட முத்துக்குளிப்பின் மூலமாக 1753இல் அதிகளவான வருவாயினை டச்சுக்காரர் பெற்றனர். போர் மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களினால் டச்சுக்காரரது காலத்தில் வட இலங்கையில் முத்துக்குளித்தல் மற்றும் முத்து வர்த்தகம் என்பன தடைப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.டச்சுக்காரரது காலத்தில் வன்னியூடாகவும் வடஇலங்கையில் காணப்பட்ட துறைமுகங்கள் ஊடாகவும் கண்டி மற்றம் தென்னிந்தியப் பகுதிகளுடன் இஸ்லாமியர்கள் முத்து வர்த்தகத்தினை மேற்கொண்டமைக்கான ஆதாரங்கள் உள்ளன. மேலும் டச்சக்காரரது ஆவணங்களில் இஸ்லாமிய வர்த்தகர்கள் கப்பல் சொந்தக்காரராக விளங்கியமைக்க ஆதாங்கள் காணப்படுகின்றன.மேலும் டச்சக்காரர் 1661,1667,1746,1749,1753,1754, 1768 ஆகிய காலங்களில் முத்துக்குளிப்பினை மேற்கொண்டமை தெரிகின்றது. *(இத்ரீஸ்,ஏ.பி.எம்,2011*)

ஆங்கிலேயர் தமது காலத்தில் 1796இலிருந்து 1887 வரை பாரியளவில் மன்னார் பகுதியில் முத்துக்குளிப்பில் ஈடுபட்டனர். இதன் மூலமாக அதிகளவான வருவாயினையும் அவர்கள் பெற்றனர். இத்தகைய இவர்களது முத்துக்குளித்தல் நடவடிக்கைக்கு உதவியர்கள் இஸ்லாமியர்களே. தொடர்ந்தும் இப்பகுதிகளில் முத்துக்குளித்தல் நடைபெற்றபோதும் அவை பெரியளவில் முன்பு போல் வெற்றியைத் தரவில்லை. காரணம் தேவைக்கு அதிகமான வகையில் முத்துக்குளித்தல் முற்பட்ட காலங்களில் நடைபெற்றதனால் இளம் முத்துச்சிப்பிகள் அழிவடைய வேண்டியேற்பட்டது. தொடர்ந்து மன்னாரினது முக்கியத்துவமும் குறைய ஆரம்பித்தது.

பொதுவாக முத்து வியாபாரத்தில் ஈடுபட்ட இஸ்லாமிய வர்த்தகர்கள் முதலில் ஆரியச்சக்கரவர்த்திகளுக்கும் பின்னர் ஐரோப்பிய ஆட்சியாளர்களுக்கும் அவர்களது கட்டுப்பாட்டில்காணப்பட்ட துறைமுகங்களைப் பயன்படுத்தவதற்கு அவர்களுக்குத் தீர்வையினைச் செலுத்த வேண்டியிருந்தது. அவ்வகையில் வடஇலங்கையில் சுங்கவரிகளைச் சேகரிக்கின்ற பல நிலையங்கள் இதன் பொருட்டு அமைக்கப்பட்டிருந்தன.

இலங்கையின் இஸ்லாமியருடைய வரலாற்றில் குறிப்பிட்டுப் பேசப்படுபவர்கள் அஞ்சுவண்ணத்து வர்த்தகர் என்பவர்கள். இவர்கள் எப்போது இலங்கைக்கு வந்தார்கள் என்பது பற்றிய விடயம் ஒருபுறமிருக்க இவர்கள் அராபியர் மற்றும் பாரசீகர்களை உள்ளடக்கியவர்களாக இனங்காணப்படுகின்றனர். இவர்களது குடியிருப்புக்கள் கேரளாவிலிருந்தே வடஇலங்கைக்கும் பரவியிருக்க வேண்டும். சோழராட்சியில் இவர்களது வர்த்தக நடவடிக்கைகள் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன.*(இந்திரபாலா,கா.,2006)*11ஆம் நூற்றண்டில் இவர்கள் மாதோட்டத்தில் இருந்ததாக விசாகபட்டினத்தில் கிடைத்த கல்வெட்டொன்றின் மூலமாக அறியக்கூடியதாக கா.இந்திரபாலா இவ்விடயமாக மேலும் குறிப்பிடுகின்றார். பின்னர் இலங்கையின் கரையோரப் பகுதிகளிலிருந்த இஸ்லாமியக் குடியிருப்புக்கள் இவர்களது குடியிருப்புக்களுடன் ஆரம்பித்திருக்கலாமென்பது இவருடைய வாதம். இவையெல்லாம் ஒருபுறமிருக்க இவர்கள் 11ஆம் நூற்றாண்டில் மாதோட்டத்தில் இருந்தமை பற்றிய குறிப்பு இருப்பதனால் கண்டிப்பாக இவர்கள் முத்துக்குளித்தல் மற்றும் முத்து வியாபாரத்துடனோ தொடர்புபட்டவர்களாக இருந்திருப்பர். இது சரியென்றால் யாழ்ப்பாண அரசு

வடஇலங்கையில் முத்துக்குளித்தல், முத்து வர்த்தகத்திலீடுபடுவதற்கு முன்னதாகவே இவர்கள் இந்நடவடிக்கையில் இப்பகுதிகளில் இறங்கியிருப்பது தெளிவாகும்.

ஏற்கனவே ஒரு இடத்தில் குறிப்பிட்டபடி முத்துக்குளித்தல் மற்றும் முத்து வர்த்தகத்துடன் இஸ்லாமிய இனத்தினது வரலாறு வடஇலங்கையின் ஒரு தீவில் ஆரம்பித்தது.அது தற்போது வேலனை பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பகுதகளிலொன்றான நயினாதீவு என்பதே அது. இங்கு வாழ்ந்து வருகின்ற இஸ்லாமியர்களது வரலாற்றின் ஆரம்பமானது ஏறத்தாள 125 ஆண்டகளுக்கு உட்பட்ட வரலாறாகவே காணப்படுகின்றது. மேலும் இங்கு வாழ்ந்துவருகின்ற இஸ்லாமியர்களது அடியானது கீழைக்கரையாக உள்ளது.பல வருடங்களாக முத்து மற்றும் சங்கு குளிக்கின்ற நோக்கத்துடன் இஸ்லாமியர்கள் பலர் இப்பகுதிக்கு கேரளாவிலிருந்து வந்து செல்வதனை இயல்பாகக் கொண்டிருந்தனர். அச்சமயத்தில் அவர்கள் நிரந்தரமாகஇப்பகுதிகளில் குடியேறுகின்ற எண்ணத்தினைக் கொண்டவர்களாக இருக்கவில்லை. இவ்வாறு வந்து சென்றவர்களிலொருவரான முகமது மீரா சாஹீப் என்பவர் இப்பகுதியில் வாழ்ந்துவந்த தமிழ்ப் பெண்ணான பொன்னி என்பவரை மணந்ததன் மூலமாகத் தமது பரம்பரையினையும் ஆரம்பித்த வைத்தார்.*(ஹனீபா, நேர்காணல்*) இதனால் அவர்கள் இன்றும் கீழைக்கரை இஸ்லாமியர்கள் என்ற வட்டத்திற்குள்ளேயே வாழ்ந்து வருகின்றனர். அவ்வகையில் மேற்கூறப்பட்ட நிகழ்வானது இரண்டு விடயங்களை எமக்குத் தெளிவு படுத்தகின்றது. முதலாவது இப்பகுதிகளில் முத்துக்களும் சங்குகளும் விளைந்தமை. மற்றொன்று இஸ்லாமியக் குடியேற்றம்.இக்காலப்பகுதியில் தமிழ்-இஸ்லாமிய இனத்தவர்கள் போட்டி போட்டுக்கொண்டு இவ்வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தபோதும்கூட அவர்களுக்கிடையிலே இவ்விடயமாகப் பாரியளவில் முரண்பாடுகள் எதுவும் ஏற்பட்டதாகக் குறிப்புக்கள் எவையும் இல்லை. இவற்றினைவிட ஏனைய சிறிய தொழில் முயற்சிகளிலும் இப்பகுதிகளில் இவர்கள் ஒற்றுமையுடன் ஈடுபட்டே வந்தனர்.

## முடிவுரை

வடஇலங்கையினது பொருளாதாரத்தில் இஸ்லாமியரது முத்துக்குளித்தல் மற்றும் முத்து வர்த்தக நடவடிக்கைகள் பிரதான இடத்தினைப் பெற்றிருந்தமையினை ஆதாரங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. இஸ்லாத்தின் எழுச்சிக்கு முன்னாராகவே வடஇலங்கையுடன் தொடர்பினை உண்டாக்கிய அராபியரும் பாரசீகரும் முத்து வியாபாரத்தில் இப்பகுதிகளில் தடம் பதித்திருந்தனர். தொடர்ந்து இவர்கள் ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்திலும் பின்வந்த காலணித்துவ ஆட்சியிலும் ஆட்சியாளருக்கு மேற்குறித்த விடயமாக உதவியதுடன் பெருமளவிலான வருவாயினையும் இவற்றினூடாக ஈட்டிக் கொண்டனர்.

## குறிப்புக்கள்

### தமிழ்


1. அருந்தவராஜா,க. (2012) யாழ்ப்பாண முஸ்லிம்கள், அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.
2. அப்துல் அஸீஸ்,ஐ.எல்.எம். (1957) இலங்கை சோனகர் வரலாறு, கொழும்பு.
3. இத்ரீஸ்,ஏ.பி.எம். (2011) சோனகர் தேசம், வாழைச்சேனை.
4. இந்திரபாலா,கா. (2006) இலங்கையில் தமிழர், குமரன் புத்தக இல்லம், சென்னை.
5. கிருஸ்ணராசா, செ.(2002) இலங்கைவரலாறு, பாகம் 2, பிறைநிலா வெளியீடு, கோண்டாவில்.
6. கிருஸ்ணராசா, செ. (1998) யாழ்ப்பாணத் தமிழரது தொல்லியல் கலாசாரப் பழமை, பிறைநிலா வெளியீடு, கோண்டாவில்.
7. சங்கரன்.(1986) மகாவம்சம்(தமிழ் மொழி பெயர்ப்பு),கொழும்பு.
8. சபாநாதன்,குல.(ப.ஆ), (1949), யாழ்ப்பாண வைபவமாலை, சுன்னாகம்.
9. சிவசாமி.வி.(1990) தீவகம் - ஒரு வரலாற்றுப் பார்வை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணம்.
10. சிவசாமி, வி. “யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர்கால நிர்வாக முறைகள்”, இலங்கை வரலாறு (கட்டுரைகளின் தொகுப்பு), அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.
11.சிற்றம்பலம், சி.க.(1992) “சமயம்”, யாழ்ப்பாண இராச்சியம், (ப.ஆ.சிற்றம்பலம். சி.க), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
12. நடராசா, க.செ. (ப.ஆ), (1980)வையாபாடல், கொழும்பு.
13.நித்தியானந்தம்,வி.(2003), இலங்கையின் பொருளாதார வரலாறு, மேசி பல்கலைக்கழகம்,நியுசிலாந்து.
14. பத்மநாதன்,சி. (2002) இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
15. பத்மநாதன், சி. (2011) யாழ்ப்பாண இராச்சியம் - ஒரு சுருக்க வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
16. ஜம்புலிங்கம்பிள்ளை,சே.ஜே. (1939) கைலாயமாலை. சென்னை.
17. ஸ்ரூவர்ட்,ஜீ.(1958) “இலங்கையில் முத்துக் குளித்தல்”, ஸ்ரீலங்கா, கொழும்பு.

1. Pathmanathan,S.(2011) Kingdom of Jaffna(A Concise History), (Tamil), Kumaran Book House, Colombo.
2. Perera,S.G.(1943) A History of Ceylon ( The Portuguese and the Dutch Period, Colombo.
3. Silva,K.M.De. (1981) A History of Sri Lanka, Oxford University press, Delhi.
4. Queyroz, Fernao De. (1930) The Temporal and Spiritual Conquest of Ceylon, trans. Perera,S.G, Colombo.